<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>
<u>**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**</u>

**OS.No: 72/2015** நாள் 14.06.2023.

பிவாசா.1, திருமதி.அன்னபூரணி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும் என்றால் சரிதான். ஆங்கிலம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விபரங்களை படித்துப்பார்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். 5 முதல் 7 வரை பிரதிவாதிகள் எனது மக்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் எங்கள் தரப்பு எதிர்வழக்குரை விபரங்களை யார் வழக்கறிஞருக்கு சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். 8ம் பிரதிவாதி முத்துலட்சுமி என்னுடன் பேச்சுவார்த்தையில் உள்ளார் என்றால் இல்லை. அவரது பிள்ளைகளான 9 10 பிரதிவாதிகள் என்னுடன் பேச்சு வார்த்தையில் உள்ளார்களா என்றால் இல்லை. 11ம் பிரதிவாதி எனது கணவர் கூட்டாண்மை நிறுவனம் தொடங்கிய போது அவருடன் இருந்தவர் என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி மாரியப்பன் 2வது இலக்க சொத்தில் ஒரு பகுதியை என்னிடம் இருந்து கிரையம் பெற்றவர் என்றால் சரிதான். 13ம் பிரதிவாதி நடராஜன் 8ம் பிரதிவாதியிடம் இருந்து 2வது இலக்க சொத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்றவர் என்றால் சரிதான். எனக்கு பூர்வீகம் இராஜபாளையம் என்றால் சரிதான். 1வது இலக்க சொத்துக்கு மேற்கு பக்கம் இருக்கும் தெருவில் தான் எங்கள் பூர்வீக வீடு என்றால் சரிதான். எனது தகப்பனாரும் எனது கணவரின் தாயாரும் அண்ணன் தங்கை உறவுமுறை கொண்டவர்கள் என்றால் சரிதான் துூரத்து உறவு. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடிவழி ஜாபிதா விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இராஜபாளையத்தில் உள்ள பூர்வீக சொத்துக்கள் மற்றும் சிவகாசியில் உள்ள சொத்துக்கள் பொறுத்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சிவகாசியில் உள்ள சொத்து என் கணவரின் சொத்துக்கள். சிவகாசியில் உள்ள சொத்துக்கள் எந்த சர்வே எண்களில் எந்த கிராமத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பு முனியாண்டி சிவலிங்கமுனி பாண்டிமுனி ஆகியோர் இராஜபாளையத்தில் உள்ள பூர்வீக வீட்டில் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் என் கணவர் 10ம் வகுப்பு படித்தவுடன் கூட்டுக்குடும்பத்தில் இருந்து வெளியேறி தனியாக வந்துவிட்டார். இந்த விபரம் என் கணவர் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். முனியாண்டி என்பவருக்கு தான் முதலில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது திருமணம் இராஜபாளையத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் இராஜபாளையத்தில் கூட்டுக்குடும்பமாக இருந்தேனா என்றால் நான் சிவகாசி வந்துவிட்டேன். என் கணவர் நடத்திய

நிறுவனத்தை யாரெல்லாம் சேர்ந்து தொடங்கினார்கள் என்றால் என் கணவர் ஜோதிபிரகாஷ் செண்பகம் ஆகியோர்கள் சேர்ந்து தொடங்கினார்கள். அந்த நிறுவனத்தின் பெயர் டெல்டா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் என்றால் சரிதான். அது 1976ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தை தொடங்கும் போது என் கணவருக்கு கூட்டுக்குடும்பத்தில் இருந்து ரூபாய் மூவாயிரம் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. 1976ம் ஆண்டு கூட்டுக்குடும்பத்தில் இருந்து ரூபாய் மூவாயிரம் கொடுத்த போது நான் திருமணம் ஆகி வராததால் எனக்கு அந்த விபரம் குறித்து தெரியாது என்றால் சரியல்ல. என் மாமனார் இராஜபாளையம் மில்ஸில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். முனியாண்டியும் இராஜபாளையம் மில்ஸில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். என் மாமனார் முனியாண்டி சிவலிங்கமுனி ஆகியோர் பூர்வீக வீட்டில் இராஜபாளையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். என் மாமனார் குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து கூட்டுக்குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் இல்லை. என் கணவர் 10ம் வகுப்பு படித்தவுடன் கூட்டுக்குடும்பத்தில் இருந்து வெளியேறி தனியாக வந்து வேலை செய்து பணம் சம்பாதித்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இதற்கு முந்தைய வழக்குகளில் என் கணவரின் வருமானத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 21.10.1988 அன்று என் மாமனார் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. இந்த உயில் பதிவு செய்யப்படாதது என்றால் அவ்வாறு உயிலே எழுதப்படவில்லை. மேற்படி உயில் குறித்து வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் எதிர்வழக்குரையில் வாதி மோசடியாக உயிலை தயாரித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயிலை பார்த்தால் தான் அந்த உயில் உண்மையா இல்லையா என்று சொல்லமுடியும் என்றால் அத்தகைய உயிலே இல்லை. வாசாஆ.13 உயிலில் என் மாமனார் மற்றும் மாமியார் 1வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுதியுள்ளார்கள் என்றால் அது தவறு. அந்த உயிலில் 1976ம் ஆண்டு பொது குடும்ப சொத்துக்களில் இருந்து என் கணவருக்கு ரூபாய் மூவாயிரம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு பணம் கொடுக்கப்படவில்லை. வாசாஆ.13ல் உள்ளது என் மாமனாரின் கையொப்பம் என்றால் இல்லை. வாசாஆ.13 உயிலை குறித்து எனக்கும் என் கணவருக்கும் தெரியும் என்றாலும் வழக்கிற்காக உயில் எழுதப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிவகாசியில் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் 1976ம் ஆண்டுக்கு பிறகு வாங்கப்பட்டவை என்றால் எனது திருமணத்திற்கு பிறகு வாங்கினார்கள். எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவர் பெயரில் முதல் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அது எந்த வருடத்தில் வாங்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முதல் சொத்து வாங்கிய போது இராஜபாளையம் முகவரியை காட்டித்தான் வாங்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சி முதல் ஈ பட்டியல் சொத்துக்கள் என் கணவர் உயிரோடு இருந்த போது வாங்கப்பட்டவை என்றால் சரிதான். சிவகாசிக்கு என் கணவர் குடும்பத்தினர் அடிக்கடி வந்து பார்க்கமுடியாது என்பதால் என் கணவர் பெயரில் பெயரளவுக்கு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1976ம் வருடம் தொடங்கப்பட்ட டெல்டா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்

நிறுவனத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து மட்டும் சிவகாசியில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சிவலிங்கமுனியும் என் கணவர் நிறுவனத்தில் சேர்ந்தார் என்றால் சரிதான். என் அண்ணன் மற்றும் தம்பி என் கணவர் நிறுவனத்தில் சேர்ந்தார்கள் என்றால் சம்பளத்திற்கு வேலைக்கு சேர்ந்தார்கள். இவர்களை போல 10 அல்லது 15 நபர்கள் அந்த நிறுவனத்தில் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். வாதியும் கொஞ்சம் நாட்கள் என் கணவர் நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். நிறுவனத்தில் வேலை பார்த்த நபர்களுக்கு அந்த நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் பணி குறித்து தெரியும் என்றால் சரிதான். வாதிக்கு என் கணவர் நிறுவனத்தில் வேலை பார்த்ததால் வேலை அனுபவம் கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. 20.05.1993ம் ஆண்டு சிவலிங்கமுனியால் டெல்டா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் மேலாளர் என்ற முறையில் வாதிக்கு வேலை அனுபவ சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிவலிங்கமுனி தற்போது உயிருடன் இல்லை என்பதால் வாசாஆ.18 யை மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவன லெட்டர்பேடை வேறு யாரும் பயன்படுத்த வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சிவலிங்கமுனிக்கும் முத்துலட்சுமிக்கும் நானும் என் கணவரும் சேர்ந்து தான் திருமணம் நடத்தி வைத்தோம் என்றால் சரிதான். சிவலிங்கமுனி திருமணத்திற்கு பிறகும் எங்கள் நிறுவனத்தில் தான் வேலை பார்த்தார் என்றால் சரிதான். என் கணவர் எப்பொழுது காலமானார் என்றால் 08.04.1995 ல் காலமானார். என் கணவர் காலமான பிறகு கூட்டாண்மை நிறுவனத்தில் பிரச்சினை வந்தது என்றால் இல்லை. என் கணவர் காலமான பிறகு கூட்டாண்மை நிறுவனத்தில் சிவலிங்கமுனி முனியாண்டி ஆகியோருக்கு கொடுக்க வேண்டிய பங்கை நான் கொடுக்காததால் பிரச்சினை ஏற்பட்டது என்றால் இல்லை. சிவலிங்கமுனி அதற்கு பிறகு இராஜபாளையம் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் சிவகாசி சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று அசல் வழக்கு எண்.13-1999 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சிவலிங்கமுனி 1995ம் வருடம் மேற்படி வழக்கை ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு சிவகாசிக்கு மாறுதலான பிறகு அசல் வழக்கு எண்.13-1999 என்று வழக்கு எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னையும் முனியாண்டியையும் பிரதிவாதிகளாக காட்டி அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நேரத்தில் நானும் முனியாண்டியும் ஒற்றுமையாக தான் இருந்தோம் என்றால் இல்லை. முனியாண்டி என் பேச்சை கேட்டுக்கொண்டு அந்த வழக்கை முறையாக நடத்தவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு தீர்ப்பில் பூர்வீக சொத்துக்களில் எனக்கும் சிவலிங்கமுனிக்கும் தலா 3 ல் 1 பாகம் அளிக்கப்பட்டது என்றாலும் முனியாண்டிக்கு சொத்து ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றாலும் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.13-1999 வழக்கு தீர்ப்பை எதிர்த்து சிவகாசி சொத்துக்களிலும் தங்களுக்கு பங்கு உள்ளது என்று சிவலிங்கமுனி மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு வழக்கு எண்.117-2001 என்றால் சரிதான். நான் அறிவுறுத்தியதால் அந்த வழக்கை சிவலிங்கமுனி வாபஸ் பெற்றார் என்றால் சரியல்ல. நான் அறிவுறுத்தியதால் தான் முனியாண்டி முறையாக ஆவணங்களை அசல் வழக்கு எண்.13-1999 ல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சிவலிங்கமுனி மேல்முறையீடு வழக்கை வாபஸ்

பெற்றுள்ளார் என்றாலும் நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சிவலிங்கமுனி மேல்முறையீடு வழக்கை வாபஸ் பெற்றதால் சிவகாசியில் உள்ள சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்று உறுதி செய்ய இயலாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.13-1999 ல் இடைக்கால மனு எண்.40-2004 ஆக இறுதி நிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2013 ல் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் 2014 ம் வருடம் சொத்தின் சுவாதீனம் கோரி நிறைவேற்று இடைக்கால மனு எண்.10-2014 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அழகை நகர் 2 வது இலக்க சொத்தில் எனது பங்கை 2013 ம் வருடம் நான் விற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் 2 வது இலக்க சொத்தை விற்ற பிறகு தான் நிறைவேற்று இடைக்கால மனு எண்.10-2014 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2019 ல் மீண்டும் நிறைவேற்று மனு எண்.4-2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2023 ல் வாதி நான் அழகை நகர் சொத்தை விற்றுவிட்டதாக தெரிவித்த பிறகு அந்த சொத்தை பொறுத்து நிறைவேற்று மனுவை நான் வாபஸ் பெற்றேன் என்றால் சரிதான். நான் சொத்தை விற்ற பிறகு அந்த சொத்தில் சுவாதீனம் கேட்டு 2014 முதல் 2023 வரை நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதி முத்துலட்சுமி வழக்கறிஞர் வைத்து இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் எதிருரைகளை ஏற்றுக்கொள்வதாக 8 ம் பிரதிவாதி இவ்வழக்கில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு தெரியப்படுத்திய பிறகு தான் 8 ம் பிரதிவாதி எனது எதிர்வழக்குரையை ஏற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 8 ம் பிரதிவாதி நான் சொல்வதை கேட்டு வழக்கில் கட்சி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியின் இறப்பு சடங்குகளில் நானும் 8 ம் பிரதிவாதியும் கலந்துகொண்டோம் என்றால் சரிதான். ஊர் வழக்கப்படி வாதி தான் இறுதி சடங்குகளை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு சொத்துக்கள் அனைத்திலும் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 1976 ல் என் கணவர் நிறுவனம் தொடங்குவதற்கு கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து ரூபாய் மூவாயிரம் வழங்கப்பட்டது என்பதால் சிவகாசியில் உள்ள சொத்தும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வருமானம் உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எப் அட்டவணை சொத்துக்கள் எங்கள் நிறுவனத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்றால் இல்லை எனது கணவரின் இறப்பு இன்சூரன்ஸ் பணம் வைத்து வாங்கப்பட்டது. என் கணவர் நிறுவனத்தில் இருந்து வந்த பணத்தை வைத்து இன்சூரன்ஸ் பிரீமியம் கட்டியுள்ளதால் எப் அட்டவணை சொத்தும் கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றாலும் கூட்டுக்குடும்பத்தில் இருந்து பெற்ற பணத்தை வைத்து தொடங்கப்பட்ட நிறுவனத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. இராஜபாளையம் மற்றும் சிவகாசி

சொத்துக்களை பொறுத்து முறையாக பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சிவகாசி நீதிமன்றத்தில் நானும் முனியாண்டியும் முறையாக வழக்கு நடத்தாமல் மோசடியாக தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of June 2023.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்/)திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.